ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

# திருமழிசைப்பிரான் அருளிச் செய்த
# திருச்சந்த விருத்தம்

## திருச்சந்த விருத்தத் தனியன்கள்

### திருக்கச்சி நம்பி அருளிச் செய்தவை

தருச்சந்தப் பொழில் தழுவு தாரணியின் துயர் தீர *
திருச்சந்த விருத்தம் செய் திருமழிசைப் பரன் வருமூர் *
கருச்சந்தும் காரகிலும் கமழ் கோங்கும் மண நாறும் *
திருச்சந்தத்துடன் மருவு திருமழிசை வளம்பதியே

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து * தம்மில்
புலவர் புகழ்க் கோலால் தூக்க * - உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் * மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது

## திருமழிசைப்பிரான் அருளிச் செய்த
# திருச்சந்த விருத்தம்

752 * பூநிலாய ஐந்துமாய்ப் * புனற்கண் நின்ற நான்குமாய் *
தீநிலாய மூன்றுமாய்ச் * சிறந்தகால் இரண்டுமாய் **
மீநிலாயதொன்றுமாகி * வேறு வேறு தன்மையாய் *
நீநிலாய வண்ணம் நின்னை * யார் நினைக்க வல்லரே (1)

753 ஆறும் ஆறும் ஆறுமாய் * ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் *
ஏறு சீர் இரண்டு மூன்றும் * ஏழும் ஆறும் எட்டுமாய் **
வேறு வேறு ஞானமாகி * மெய்யினோடு பொய்யுமாய் *
ஊறொடோசையாய ஐந்தும் * ஆய ஆய மாயனே (2)

753 ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி * அல்லவற்றுளாயுமாய் *
ஐந்து மூன்றும் ஒன்றுமாகி * நின்ற ஆதி தேவனே **
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி * அந்தரத்தணைந்து நின்று *
ஐந்தும் ஐந்துமாய நின்னை * யாவர் காண வல்லரே (3)

755 மூன்று முப்பதாறினோடு * ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் *
மூன்று மூர்த்தியாகி மூன்று * மூன்று மூன்று மூன்றுமாய் **
தோன்று சோதி மூன்றுமாய்த் * துளக்கமில் விளக்கமாய் *
ஏன்றெனாவியுள் புகுந்தது * என் கொலோ எம் ஈசனே (4)

756 நின்றியங்கும் ஒன்றலா * உருக்கள் தோறும் ஆவியாய் *
ஒன்றி உள் கலந்து நின்ற * நின்ன தன்மை இன்னதென்று **
என்றும் யார்க்கும் எண்ணிறந்த * ஆதியாய் நின் உந்தி வாய் *
அன்று நான்முகற் பயந்த * ஆதி தேவன் அல்லையே (5)

757 நாகமேந்து மேருவெற்பை * நாகமேந்து மண்ணினை *
நாகமேந்து மாகமாகம் * மாகமேந்து வார்புனல் **
மாகமேந்து மங்குல்தீ ஓர் * வாயுவைந்தமைந்து காத்து *
ஏகமேந்தி நின்ற நீர்மை * நின் கணே இயன்றதே (6)

758 ஒன்றிரண்டு மூர்த்தியாய் * உறக்கமோடு உணர்ச்சியாய் *
ஒன்றிரண்டு காலமாகி * வேலை ஞாலமாயினாய் **
ஒன்றிரண்டு தீயுமாகி * ஆயனாய மாயனே *
ஒன்றிரண்டு கண்ணினானும் * உன்னை ஏத்த வல்லனே (7)

759 ஆதியான வானவர்க்கும் * அண்டமாய அப்புறத்து *

ஆதியான வானவர்க்கும் * ஆதியான ஆதி நீ **
ஆதியான வான வாணர் * அந்த காலம் நீ உரைத்தி *
ஆதியான காலம் நின்னை * யாவர் காண வல்லரே (8)

760 தாதுலாவு கொன்றை மாலை * துன்னு செஞ்சடைச் சிவன் *
நீதியால் வணங்கு பாத * நின்மலா நிலாய சீர் **
வேத வாணர் கீத வேள்வி * நீதியான வேள்வியார் *
நீதியால் வணங்குகின்ற * நீர்மை நின் கண் நின்றதே (9)

761 தன்னுளே திரைத்தெழும் * தரங்கவெண் தடங்கடல் *
தன்னுளே திரைத்தெழுந்து * அடங்குகின்ற தன்மை போல் **
நின்னுளே பிறந்திறந்து * நிற்பவும் திரிபவும் *
நின்னுளே அடங்குகின்ற * நீர்மை நின் கண் நின்றதே (10)

762 சொல்லினால் தொடர்ச்சி நீ * சொலப்படும் பொருளும் நீ *
சொல்லினால் சொலப்படாது * தோன்றுகின்ற சோதி நீ **
சொல்லினால் படைக்க * நீ படைக்க வந்து தோன்றினார் *
சொல்லினால் சுருங்க * நின் குணங்கள் சொல்ல வல்லரே (11)

763 உலகு தன்னை நீ படைத்தி * உள்ளொடுக்கி வைத்தி * மீண்டு
உலகு தன்னுளே பிறத்தி * ஓரிடத்தை அல்லையால் **
உலகு நின்னொடு ஒன்றி நிற்க * வேறு நிற்றியாதலால் *
உலகில் நின்னை உள்ள சூழல் * யாவர் உள்ள வல்லரே (12)

764 இன்னை என்று சொல்லல் ஆவது * இல்லையாதும் இட்டிடை *
பின்னை கேள்வன் என்பர் * உன் பிணக்குணர்ந்த
பெற்றியோர் **
பின்னையாய கோலமோடு * பேரும் ஊரும் ஆதியும் *
நின்னை யார் நினைக்க வல்லர் * நீர்மையால் நினைக்கிலே (13)

765 தூய்மை யோகமாயினாய் * துழாய் அலங்கல் மாலையாய் *
ஆமையாகி ஆழ்கடல் துயின்ற * ஆதி தேவ ** நின்
நாமதேயம் இன்னதென்ன * வல்லமல்லவாகிலும் *
சாம வேத கீதனாய * சக்ரபாணி அல்லையே (14)

766 அங்கம் ஆறும் வேதம் நான்கும் * ஆகி நின்று அவற்றுளே *
தங்குகின்ற தன்மையாய் * தடங்கடல் பணத்தலை **
செங்கண் நாகணைக் கிடந்த * செல்வமல்கு சீரினாய் *
சங்க வண்ணமன்ன மேனி * சார்ங்கபாணி அல்லையே (15)

767 தலைக்கணத்துகள் குழம்பு * சாதி சோதி தோற்றமாய் *
நிலைக் கணங்கள் காண வந்து * நிற்றியேலும் நீடிரும் **
கலைக் கணங்கள் சொற் பொருள் * கருத்தினால் நினைக்கொணா *
மலைக் கணங்கள் போலுணர்த்தும் * மாட்சி நின்தன் மாட்சியே (16)

768 ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி * நாலு மூர்த்தி நன்மை சேர் *
போக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி * எண்ணில் மூர்த்தியாய் **
நாக மூர்த்தி சயனமாய் * நலங்கடல் கிடந்து * மேல்
ஆக மூர்த்தியாய வண்ணம் * என்கொல் ஆதி தேவனே (17)

769 விடத்த வாய் ஒராயிரம் * இராயிரம் கண் வெந்தழல் *
விடத்து வீள்விலாத போகம் * மிக்க சோதி தொக்க சீர் **
தொடுத்து மேல் விதானமாய * பௌவநீர் அராவணை *
படுத்த பாயல் பள்ளி கொள்வது * என் கொல் வேலை வண்ணனே (18)

770 புள்ளாதாகி வேதம் நான்கும் * ஓதினாய் அதன்றியும் *
புள்ளின் வாய் பிளந்து * புட்கொடிப் பிடித்த பின்னரும் **
புள்ளை ஊர்தியாதலால் * அதென் கொல் மின்கொள் நேமியாய் *
புள்ளின் மெய்ப் பகைக் கடல் கிடத்தல் * காதலித்ததே (19)

771 கூசமொன்றுமின்றி * மாசுணம் படுத்து வேலை நீர் *
பேச நின்ற தேவர் வந்து * பாட முன் கிடந்ததும் **
பாசம் நின்ற நீரில் வாழும் * ஆமையான கேசவா *
ஏச அன்று நீ கிடந்தவாறு * கூறு தேறவே (20)

772 * அரங்கனே தரங்க நீர் * கலங்க அன்று குன்று சூழ் *
மரங்கள் தேய மாநிலம் குலுங்க * மாசுணம் சுலாய் **
நெருங்க நீ கடைந்த போது * நின்ற சூரர் என் செய்தார் *
குரங்கையாளுகந்த எந்தை * கூறு தேற வேறிதே (21)

773 பண்டும் இன்றும் மேலுமாய் ஓர் * பாலனாகி ஞாலமேழும்
உண்டு * மண்டி ஆலிலைத் துயின்ற * ஆதி தேவனே **
வண்டு கிண்டு தண் துழாய் * அலங்கலாய் கலந்த சீர் *
புண்டரீக பாவை சேரும் மார்ப * பூமி நாதனே (22)

774 வால்நிறத்தொர் சீயமாய் * வளைந்த வாள் எயிற்றவன் *
ஊன் நிறத்து உகிர்த்தலம் * அழுத்தினாய் உலாய சீர் **
நால் நிறத்த வேத நாவர் * நல்ல யோகினால் வணங்கு *
பால் நிறக் கடல் கிடந்த * பற்பநாபன் அல்லையே (23)

775 கங்கை நீர் பயந்த பாத * பங்கயத்து எம் அண்ணலே *
அங்கை ஆழி சங்கு தண்டு * வில்லும் வாளும் ஏந்தினாய் **
சிங்கமாய தேவ தேவ * தேனுலாவு மென்மலர் *
மங்கை மன்னி வாழு மார்ப * ஆழி மேனி மாயனே (24)

776 வரத்தினில் சிரத்தை மிக்க * வாள் எயிற்று மற்றவன் *
உரத்தினில் கரத்தை வைத்து * உகிர்த்தலத்தை ஊன்றினாய் **
இரத்தி நீ இதென்ன பொய் * இரந்த மண் வயிற்றுளே
கரத்தி * உன் கருத்தை யாவர் காண வல்லர் * கண்ணனே (25)

777 ஆணினோடு பெண்ணுமாகி * அல்லவோடு நல்லவாய் *
ஊணொடோசை ஊறுமாகி * ஒன்றலாத மாயையாய் **
பூணி பேணும் ஆயனாகிப் * பொய்யினோடு மெய்யுமாய் *
காணி பேணும் மாணியாய்க் * கரந்து சென்ற கள்வனே (26)

778 விண் கடந்த சோதியாய் * விளங்கு ஞான மூர்த்தியாய் *
பண் கடந்த தேசமேவு * பாவ நாச நாதனே **
எண் கடந்த யோகினோடு * இரந்து சென்று மாணியாய் *
மண் கடந்த வண்ணம் நின்னை * யார் மதிக்க வல்லரே (27)

779 படைத்த பார் இடந்தளந்து * அதுண்டுமிழ்ந்து பௌவநீர் *
படைத்தடைத்ததில் கிடந்து * முன் கடைந்த பெற்றியோய் **
மிடைத்தமாலி மாலிமான் * விலங்கு காலனூர் புக *
படைக்கலம் விடுத்த * பல்படைத் தடக்கை மாயனே (28)

780 பரத்திலும் பரத்தையாதி * பௌவநீர் அணைக் கிடந்து *
உரத்திலும் ஒருத்தி தன்னை * வைத்துகந்து அதன்றியும் **
நரத்திலும் பிறத்தி * நாத ஞான மூர்த்தி ஆயினாய் *
ஒருத்தரும் நினாது தன்மை * இன்னதென்ன வல்லரே (29)

781 வானகம்மும் மண்ணகம்மும் * வெற்பும் ஏழ்கடல்களும் *
போனகம் செய்து ஆலிலைத் துயின்ற * புண்டரீகனே **
தேனகஞ் செய்தண்ணறும் * மலர்த் துழாய் நன்மாலையாய் *
கூனகம் புகத் தெறித்த * கொற்ற வில்லி அல்லையே (30)

782 கால நேமி காலனே * கணக்கிலாத கீர்த்தியாய் *
ஞாலமேழும் உண்டு * பண்டு ஓர் பாலனாய பண்பனே **
வேலை வேவ வில் வளைத்த * வெல் சினத்த வீர * நின்
பாலராய பத்தர் சித்தம் * முத்தி செய்யும் மூர்த்தியே (31)

783 குரக்கினப் படை கொடு * குரை கடலின் மீது போய் *
அரக்கர் அங்கரங்க * வெஞ்சரம் துரந்த ஆதி நீ **
இரக்க மண் கொடுத்தவற்கு * இரக்கம் ஒன்றும் இன்றியே *
பரக்க வைத்தளந்து கொண்ட * பற்ப பாதன் அல்லையே (32)

784 மின்னிறத்து எயிற்றரக்கன் வீழ * வெஞ்சரம் துரந்து *
பின்னவற்கு அருள் புரிந்து * அரசளித்த பெற்றியோய் **
நன்னிறத்தொரின் சொல் ஏழை * பின்னை கேள்வ மன்னு சீர் *
பொன்னிறத்த வண்ணனாய * புண்டரீகன் அல்லையே (33)

785 ஆதி ஆதி ஆதி நீ * ஓர் அண்டம் ஆதி ஆதலால் *
சோதியாத சோதி நீ * அதுண்மையில் விளங்கினாய் **
வேதமாகி வேள்வியாகி * விண்ணினோடு மண்ணுமாய் *
ஆதியாகி ஆயனாய * மாயம் என்ன மாயமே (34)

786 அம்புலாவும் மீனுமாகி * ஆமையாகி ஆழியார் *
தம்பிரானுமாகி மிக்கது * அன்பு மிக்கு அதன்றியும் **
கொம்பராவு நுண்மருங்குல் * ஆயர் மாதர் பிள்ளையாய் *
எம்பிரானும் ஆய வண்ணம் * என் கொலோ எம் ஈசனே (35)

787 ஆடகத்த பூண்முலை * அசோதை ஆய்ச்சி பிள்ளையாய் *
சாடுதைத்தொர் புள்ளதாவி * கள்ளதாய பேய் மகள் **
வீட வைத்த வெய்ய கொங்கை * ஐய பாலமுது செய்து *
ஆடகக்கை மாதர் வாய் * அமுதம் உண்டதென் கொலோ (36)

788 காய்த்தநீள் விளங்கனி உதிர்த்து * எதிர்ந்த பூங்குருந்தம்
சாய்த்து * மா பிளந்த கைத்தலத்த * கண்ணன் என்பரால் **
ஆய்ச்சி பாலை உண்டு மண்ணை உண்டு * வெண்ணெய்
உண்டு * பின்
பேய்ச்சி பாலை உண்டு * பண்டொர் ஏனமாய வாமனா (37)

789 கடம் கலந்த வன் கரி * மருப்பொசித்து ஓர் பொய்கை வாய் *
விடம் கலந்த பாம்பின் மேல் * நடம் பயின்ற நாதனே **
குடம் கலந்த கூத்தனாய * கொண்டல் வண்ண தண்துழாய் *

வடம் கலந்த மாலை மார்ப * கால நேமி காலனே (38)

790 வெற்பெடுத்து வேலை நீர் * கலக்கினாய் அதன்றியும் *
வெற்பெடுத்து வேலை நீர் * வரம்பு கட்டி வேலை சூழ் **
வெற்பெடுத்த இஞ்சி சூழ் * இலங்கை கட்டழித்த நீ *
வெற்பெடுத்து மாரி காத்த * மேகவண்ணன் அல்லையே (39)

791 ஆனை காத்து ஓர் ஆனை கொன்று * அதன்றி ஆயர்
பிள்ளையாய் *
ஆனை மேய்த்தி ஆநெயுண்டி * அன்று குன்றம் ஒன்றினால் **
ஆனை காத்து மையரிக்கண் * மாதரார் திறத்து * முன்
ஆனை அன்று சென்றடர்த்த * மாயம் என்ன மாயமே (40)

792 ஆயனாகி ஆயர் மங்கை * வேயதோள் விரும்பினாய் *
ஆய நின்னை யாவர் வல்லர் * அம்பரத்தொடு இம்பராய் **
மாய மாய மாயை கொல் * அதன்றி நீ வகுத்தலும் *
மாய மாயம் ஆக்கினாய் * உன் மாய முற்றும் மாயமே (41)

793 வேறிசைந்த செக்கர் மேனி * நீறணிந்த புன்சடை *
கீறுதிங்கள் வைத்தவன் * கைவைத்தவன் கபால்மிசை **
ஊறு செங்குருதியால் * நிறைத்த காரணம் தனை *
ஏறு சென்றடர்த்த ஈச * பேசு கூசமின்றியே (42)

794 வெஞ்சினத்த வேழ * வெண் மருப்பொசித்து உருத்தமா *
கஞ்சனைக் கடிந்து * மண்ணளந்து கொண்ட காலனே **
வஞ்சனத்து வந்த பேய்ச்சி * ஆவி பாலுள் வாங்கினாய் *
அஞ்சனத்த வண்ணனாய * ஆதி தேவன் அல்லையே (43)

795 பாலினீர்மை செம்பொனீர்மை * பாசியின் பசும் புறம் *
போலும் நீர்மை பொற்புடைத் தடத்து * வண்டு விண்டுலாம் **
நீல நீர்மை என்றிவை * நிறைந்த காலம் நான்குமாய் *
மாலின் நீர்மை வையகம் * மறைத்தது என்ன நீர்மையே (44)

796 மண்ணுளாய் கொல் விண்ணுளாய் கொல் * மண்ணுளே
மயங்கி நின்று *
எண்ணும் எண்ணகப்படாய் கொல் * என்ன மாயை நின்
தமர் **
கண்ணுளாய் கொல் சேயை கொல் * அனந்தன் மேல்
கிடந்த எம்

புண்ணியா * புனந்துழாய் * அலங்கலம் புனிதனே (45)

797 தோடு பெற்ற தண் துழாய் * அலங்கலாடு சென்னியாய் *
கோடு பற்றி ஆழி ஏந்தி * அஞ்சிறைப் புள் ஊர்தியால் **
நாடு பெற்ற நன்மை * நண்ணமில்லையேனும் நாயினேன் *
வீடு பெற்று இறப்பொடும் * பிறப்பறுக்குமா சொலே (46)

798 காரொடொத்த மேனி நங்கள் கண்ண * விண்ணின் நாதனே *
நீரிடத்தராவணைக் * கிடத்தி என்பர் அன்றியும் **
ஓரிடத்தையல்லை எல்லை * இல்லை என்பர் ஆதலால் *
சேர்விடத்தை நாயினேன் * தெரிந்திறைஞ்சுமா சொலே (47)

799 குன்றில் நின்று வான் இருந்து * நீள் கடல் கிடந்து * மண்
ஒன்று சென்றதொன்றை உண்டு * அதொன்றிடந்து
பன்றியாய் **
நன்று சென்ற நாள் அவற்றுள் * நல்லுயிர் படைத்து அவர்க்கு *
அன்று தேவமைத்தளித்த * ஆதி தேவன் அல்லையே (48)

780 ***** கொண்டை கொண்ட கோதை மீது * தேனுலாவு கூனி
கூன் *
உண்டை கொண்டு அரங்கவோட்டி * உள் மகிழ்ந்த நாதன்
ஊர் **
நண்டை உண்டு நாரை பேர * வாளை பாய நீலமே *
அண்டை கொண்டு கெண்டை மேயும் * அந்தணீர் அரங்கமே (49)

781 வெண்திரைக் கருங்கடல் * சிவந்து வேவ முன்னொர் நாள் *
திண்திறல் சிலைக்கை வாளி * விட்ட வீரர் சேரும் ஊர் **
எண்திசைக் கணங்களும் * இறைஞ்சியாடு தீர்த்த நீர் *
வண்டிரைத்த சோலை வேலி * மன்னு சீர் அரங்கமே (50)

802 சரங்களைத் துரந்து * வில் வளைத்து இலங்கை மன்னவன் *
சிரங்கள் பத்தறுத்து உதிர்த்த * செல்வர் மன்னு பொன்னிடம் **
பரந்து பொன்னிரந்து நுந்தி * வந்தலைக்கும் வார் புனல் *
அரங்கம் என்பர் நான்முகத்து * அயன் பணிந்த கோயிலே (51)

803 பொற்றையுற்ற முற்றல் யானை * போர் எதிர்ந்து வந்ததை *
பற்றி உற்று மற்றதன் * மருப்பொசித்த பாகன் ஊர் **
சிற்றெயிற்று முற்றல் மூங்கில் * மூன்று தண்டர் ஒன்றினர் *
அற்ற பற்றர் சுற்றி வாழும் * அந்தணீர் அரங்கமே (52)

804 மோடியோடிலச்சையாய * சாபம் எய்தி முக்கணான் *
கூடு சேனை மக்களோடு * கொண்டு மண்டி வெஞ்சமத்து
ஓட ** வாணன் ஆயிரம் * கரம் கழித்த ஆதிமால் *
பீடு கோயில் கூடு நீர் * அரங்கம் என்ற பேரதே (53)

805 இலைத் தலைச் சரம் துரந்து * இலங்கை கட்டழித்தவன் *
மலைத் தலைப் பிறந்திழிந்து * வந்து நுந்து சந்தனம் **
குலைத் தலைத்திறுத்தெறிந்த * குங்குமக் குழம்பினோடு *
அலைத்தொழுகு காவிரி * அரங்கம் மேய அண்ணலே (54)

806 மன்னு மாமலர்க் கிழத்தி * வைய மங்கை மைந்தனாய் *
பின்னும் ஆயர் பின்னை தோள் * மணம் புணர்ந்ததன்றியும் **
உன்ன பாதம் என்ன சிந்தை * மன்ன வைத்து நல்கினாய் *
பொன்னி சூழ் அரங்கமேய * புண்டரீகன் அல்லையே (55)

807 இலங்கை மன்னனைந்தொடைந்து * பைந்தலை நிலத்துக *
கலங்க அன்று சென்று கொன்று * வென்றி கொண்ட வீரனே **
விலங்கு நூலர் வேத நாவர் * நீதியான கேள்வியார் *
வலங்கொளக் குடந்தையுள் * கிடந்த மாலுமல்லையே (56)

808 சங்கு தங்கு முன்கை நங்கை * கொங்கை தங்கல் உற்றவன் *
அங்கம் மங்க அன்று சென்று * அடர்த்தெறிந்த ஆழியான் **
கொங்கு தங்குவார் குழல் * மடந்தைமார் குடைந்த நீர் *
பொங்கு தண் குடந்தையுள் * கிடந்த புண்டரீகனே (57)

809 மரம் கெட நடந்தடர்த்து * மத்த யானை மத்தகத்து *
உரம் கெடப் புடைத்து * ஓர் கொம்பொசித்து உகந்த
உத்தமா **
துரங்கம் வாய் பிளந்து * மண்ணளந்த பாத * வேதியர்
வரம் கொளக் குடந்தையுள் * கிடந்த மாலுமல்லையே (58)

810 சாலி வேலி தண்வயல் * தடங்கிடங்கு பூம்பொழில் *
கோலமாட நீடு * தண்குடந்தை மேய கோவலா **
கால நேமி வக்கரன் * கரன் முரன் சிரம்மவை *
காலனோடு கூட * வில் குனித்த விற்கை வீரனே (59)

811 * செழுங்கொழும் பெரும் பனி பொழிந்திட * உயர்ந்த வேய்
விழுந்துலர்ந்தெழுந்து * விண் புடைக்கும் வேங்கடத்துள்
நின்று **

எழுந்திருந்து தேன் பொருந்து * பூம்பொழில் தழைக்
கொழும் *
செழுந்தடங் குடந்தையுள் * கிடந்த மாலுமல்லையே (60)

812 * நடந்த கால்கள் நொந்தவோ * நடுங்க ஞாலம் ஏனமாய் *
இடந்த மெய் குலுங்கவோ * விலங்கு மால்வரைச்சுரம் **
கடந்த கால் பரந்த * காவிரிக் கரைக் குடந்தையுள் *
கிடந்தவாறு எழுந்திருந்து * பேசு வாழி கேசனே (61)

813 * கரண்ட மாடு பொய்கையுள் * கரும்பனைப் பெரும் பழம் *
புரண்டு வீழ வாளை பாய் * குறுங்குடி நெடுந்த காய் **
திரண்ட தோள் இரணியன் * சினங்கொள் ஆகம் ஒன்றையும் *
இரண்டு கூறு செய்துகந்த * சிங்கம் என்பது உன்னையே (62)

814 நன்றிருந்து யோக நீதி * நண்ணுவார்கள் சிந்தையுள் *
சென்றிருந்து தீவினைகள் * தீர்த்த தேவ தேவனே **
குன்றிருந்த மாட நீடு * பாடகத்தும் ஊரகத்தும் *
நின்றிருந்து வெஃகணைக் கிடந்தது * என்ன நீர்மையே (63)

815 நின்றது எந்தை ஊரகத்து * இருந்தது எந்தை பாடகத்து *
அன்று வெஃகணைக் கிடந்தது * என்னிலாத முன்னெலாம் **
அன்று நான் பிறந்திலேன் * பிறந்த பின் மறந்திலேன் *
நின்றதும் இருந்ததும் * கிடந்ததும் என் நெஞ்சுளே (64)

816 நிற்பதும் ஒர் வெற்பகத்து * இருப்பும் விண் கிடப்பதும் *
நற்பெருந்திரைக் கடலுள் * நானிலாத முன்னெலாம் **
அற்புதன் அனந்த சயனன் * ஆதி பூதன் மாதவன் *
நிற்பதும் இருப்பதும் * கிடப்பதும் என் நெஞ்சுளே (65)

817 இன்று சாதல் நின்று சாதல் * அன்றியாரும் வையகத்து *
ஒன்றி நின்று வாழ்தலின்மை கண்டும் * நீசர் என் கொலோ **
அன்று பாரளந்த பாத * போதையொன்றி வானின் மேல் *
சென்று சென்று தேவராய் * இருக்கிலாத வண்ணமே (66)

818 சண்ட மண்டலத்தினூடு * சென்று வீடு பெற்று மேல் *
கண்டு வீடிலாத காதல் * இன்பம் நாளும் எய்துவீர் **
புண்டரீக பாத புண்ய கீர்த்தி * நும் செவி மடுத்து
உண்டு * நும்முறு வினைத் * துயருள் நீங்கி உய்ம்மினோ (67)

819 முத்திறத்து வாணியத்து * இரண்டில் ஒன்றும் நீசர்கள் *
மத்தராய் மயங்குகின்றது * இட்டதிலிறந்து போந்து **
எத்திறத்தும் உய்வது ஓர் * உபாயமில்லை உய்குறில் *
தொத்துறுத்த தண்துழாய் * நன்மாலை வாழ்த்தி வாழ்மினோ (68)

820 காணிலும் உருப்பொலார் * செவிக்கினாத கீர்த்தியார் *
பேணிலும் வரம் தர * மிடுக்கிலாத தேவரை **
ஆணம் என்றடைந்து வாழும் * ஆதர்காள் எம்மாதி பால் *
பேணி நும் பிறப்பெனும் * பிணக்கு அறுக்க கிற்றிரே (69)

821 குந்தமோடு சூலம் வேல்கள் * தோமரங்கள் தண்டு வாள் *
பந்தமான தேவர்கள் * பரந்து வானகம் உற **
வந்த வாணன் ஈரைஞ்ஞூறு * தோள்களைத் துணித்த நாள் *
அந்த வந்த ஆகுலம் * அமரரே அறிவரே (70)

822 வண்டுலாவு கோதை மாதர் * காரணத்தினால் வெகுண்டு *
இண்ட வாணன் ஈரைஞ்ஞூறு * தோள்களைத் துணித்த நாள் **
முண்டன் நீறன் மக்கள் வெப்பு * மோடி அங்கி ஓடிடக்
கண்டு * நாணி வாணனுக்கு இரங்கினான் * எம் மாயனே (71)

823 போதில் மங்கை பூதலக் கிழத்தி * தேவி அன்றியும் *
போது தங்கு நான்முகன் * மகன் அவன் மகன் சொலில் **
மாது தங்கு கூறன் * ஏறதூர்தி என்று வேத நூல் *
ஓதுகின்றதுண்மை அல்லதில்லை * மற்றுரைக்கிலே (72)

824 மரம் பொதச் சரம் துரந்து * வாலி வீழ முன்னொர் நாள் *
உரம் பொதச் சரம் துரந்த * உம்பராளி எம்பிரான் **
வரம் குறிப்பில் வைத்தவர்க்கு * அலாது வானம் ஆளிலும் *
நிரம்பு நீடு போகம் * எத்திறத்தும் யார்க்குமில்லையே (73)

825 அறிந்தறிந்து வாமனன் * அடியிணை வணங்கினால் *
செறிந்தெழுந்த ஞானமோடு * செல்வமும் சிறந்திடும் **
மறிந்தெழுந்ததெண் திரையுள் * மன்னு மாலை வாழ்த்தினால் *
பறிந்தெழுந்து தீவினைகள் * பற்றறுதல் பான்மையே (74)

826 ஒன்றி நின்று நற்றவம் செய்து * ஊழி ஊழி தோறெலாம் *
நின்று நின்று அவன் குணங்கள் * உள்ளி உள்ளம் தூயராய் **
சென்று சென்று தேவ தேவர் * உம்பர் உம்பர் உம்பராய் *
அன்றி எங்கள் செங்கண் மாலை * யாவர் காண வல்லரே (75)

827 புன்புல வழி அடைத்து * அரக்கிலச்சினை செய்து *
நன்புல வழி திறந்து * ஞான நற்சுடர் கொளீ இ **
என்பிலெள்கி நெஞ்சுருகி * உள் கனிந்தெழுந்துதது ஓர் *
அன்பிலன்றி ஆழியானை * யாவர் காண வல்லரே (76)

828 எட்டும் எட்டும் எட்டுமாய் * ஒரேழும் ஏழும் ஏழுமாய் *
எட்டு மூன்றும் ஒன்றுமாகி * நின்ற ஆதி தேவனை **
எட்டினாய பேதமோடு * இறைஞ்சி நின்று அவன் பெயர் *
எட்டெழுத்தும் ஓதுவார்கள் * வல்லர் வானமாளவே (77)

829 சோர்விலாத காதலால் * தொடக்கறா மனத்தராய் *
நீர் அராவணைக் கிடந்த * நின்மலன் நலங்கழல் **
ஆர்வமோடு இறைஞ்சி நின்று * அவன் பெயர் எட்டெழுத்தும் *
வாரமாக ஓதுவார்கள் * வல்லர் வானமாளவே (78)

830 பத்தினோடு பத்துமாய் * ஒர் ஏழினோடு ஒர் ஒன்பதாய் *
பத்தினால் திசைக் கண் நின்ற * நாடு பெற்ற நன்மையாய் **
பத்தினாய தோற்றமோடு * ஒர் ஆற்றல் மிக்க ஆதி பால் *
பத்தராம் அவர்க்கலாது * முத்தி முற்றலாகுமே (79)

831 வாசியாகி நேசமின்றி * வந்தெதிர்ந்த தேனுகன் *
நாசமாகி நாளுலப்ப * நன்மை சேர் பனங்கனிக்கு **
வீசி மேல் நிமிர்ந்த தோளில் * இல்லையாக்கினாய் கழற்கு *
ஆசையாம் அவர்க்கலால் * அமரர் ஆகலாகுமே (80)

832 கடைந்து பாற்கடல் கிடந்து * கால நேமியைக் கடிந்து *
உடைந்த வாலி தன் தனக்கு * உதவ வந்த இராமனாய் **
மிடைந்த ஏழ் மரங்களும் * அடங்க எய்து வேங்கடம் *
அடைந்த மால பாதமே * அடைந்து நாளும் உய்ம்மினோ (81)

833 எத்திறத்தும் ஒத்து நின்று * உயர்ந்துயர்ந்த பெற்றியோய் *
முத்திறத்து மூரி நீர் * அராவணைத் துயின்ற ** நின்
பத்துறுத்த சிந்தையோடு * நின்று பாசம் விட்டவர்க்கு *
எத்திறத்தும் இன்பம் * இங்கும் அங்கும் எங்குமாகுமே (82)

834 மட்டுலாவு தண்துழாய் * அலங்கலாய் பொலன் கழல் *
விட்டு வீள்விலாத போகம் * விண்ணில் நண்ணியேறினும் **
எட்டினோடு இரண்டெனும் * கயிற்றினால் மனம் தனைக்
கட்டி * வீடிலாது வைத்த காதல் * இன்பமாகுமே (83)

835 பின் பிறக்க வைத்தனன் கொல் * அன்றி நின்று தன் கழற்கு *
அன்புறைக்க வைத்த நாள் * அறிந்தனன் கொல் ஆழியான் **
தன் திறத்து ஒர் அன்பிலா * அறிவிலாத நாயினேன் *
என் திறத்தில் என் கொல் * எம்பிரான் குறிப்பில் வைத்ததே (84)

836 நச்சராவணைக் கிடந்த * நாத பாத போதினில் *
வைத்த சிந்தை வாங்குவித்து * நீங்குவிக்க நீ இனம் **
மெய்த்தன் வல்லை ஆதலால் * அறிந்தனன் நின் மாயமே *
உய்த்து நின் மயக்கினில் * மயக்கல் என்னை மாயனே (85)

837 சாடு சாடு பாதனே * சலம் கலந்த பொய்கை வாய் *
ஆடராவின் வன்பிடர் * நடம் பயின்ற நாதனே **
கோடு நீடு கைய செய்ய * பாதம் நாளும் உள்ளினால் *
வீடனாக மெய் செயாத * வண்ணம் என் கொல் கண்ணனே (86)

838 நெற்றி பெற்ற கண்ணன் * விண்ணின் நாதனோடு போதின் மேல் *
நற்றவத்து நாதனோடு * மற்றுமுள்ள வானவர் **
கற்ற பெற்றியால் வணங்கு * பாத நாத வேத * நின்
பற்றலால் ஓர் பற்று * மற்றதுற்றிலேன் உரைக்கிலே (87)

839 வெள்ளை வேலை வெற்பு நாட்டி * வெள்ளெயிற்றராவளாய் *
அள்ளலாக் கடைந்த அன்று * அருவரைக்கு ஒர் ஆமையாய் **
உள்ள நோய்கள் தீர் மருந்து * வானவர்க்களித்த * எம்
வள்ளலாரை அன்றி * மற்றோர் தெய்வம் நான் மதிப்பனே (88)

840 பார் மிகுத்த பாரம் முன் * ஒழிச்சுவான் அருச்சுனன் *
தேர் மிகுத்து மாயமாக்கி * நன்று கொன்று வென்றி சேர் **
மாரதர்க்கு வான் கொடுத்து * வையம் ஐவர் பாலதாம் *
சீர் மிகுத்த நின்னலால் ஓர் * தெய்வம் நான் மதிப்பனே (89)

841 குலங்களாய ஈரிரண்டில் * ஒன்றிலும் பிறந்திலேன் *
நலங்களாய நற்கலைகள் * நாவிலும் நவின்றிலேன் **
புலன்கள் ஐந்தும் வென்றிலேன் * பொறியிலேன் புனித * நின்
இலங்கு பாதம் அன்றி * மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே (90)

842 பண்ணுலாவு மென்மொழிப் * படைத் தடங்கணாள் பொருட்டு *
எண்ணிலா அரக்கரை * நெருப்பினால் நெருக்கினாய் **
கண்ணலால் ஓர் கண்ணிலேன் * கலந்த சுற்றம் மற்றிலேன் *

எண்ணிலாத மாய நின்னை * என்னுள் நீக்கல் என்றுமே (91)

843 விடைக் குலங்கள் ஏழடர்த்து * வென்றி வேற்கண் மாதரார் *
கடிக் கலந்த தோள் புணர்ந்த * காலி ஆய வேலை நீர் **
படைத்து அடைத்து அதில் கிடந்து * முன் கடைந்து நின்
தனக்கு *
அடைக்கலம் புகுந்த என்னை * அஞ்சல் என்ன வேண்டுமே (92)

844 சுரும்பரங்கு தண்துழாய் * துதைந்தலர்ந்த பாதமே *
விரும்பி நின்று இறைஞ்சுவேற்கு * இரங்கு அரங்க வாணனே **
கரும்பிருந்த கட்டியே * கடல் கிடந்த கண்ணனே *
இரும்பரங்க வெஞ்சரம் துரந்த * வில்லி ராமனே (93)

845 ஊனில் மேய ஆவி நீ * உறக்கமோடு உணர்ச்சி நீ *
ஆனில் மேய ஐந்தும் நீ * அவற்றுள் நின்ற தூய்மை நீ **
வானினோடு மண்ணும் நீ * வளங்கடற் பயனும் நீ *
யானும் நீ அதன்றி * எம்பிரானும் நீ இராமனே (94)

846 அடக்கரும்புலன்கள் ஐந்தடக்கி * ஆசையாம் அவை *
தொடக்கறுத்து வந்து * நின் தொழிற்கண் நின்ற என்னை நீ **
விடக் கருதி மெய் செயாது * மிக்கொர் ஆசை ஆக்கிலும் *
கடல் கிடந்த நின்னலால் ஓர் * கண்ணிலேன் எம் அண்ணலே (95)

847 வரம்பிலாத மாயை மாய * வையம் ஏழும் மெய்ம்மையே *
வரம்பில் ஊழி ஏத்திலும் * வரம்பிலாத கீர்த்தியாய் **
வரம்பிலாத பல் பிறப்பு * அறுத்து வந்து நின் கழல் *
பொருந்து மாதிருந்த நீ * வரம் செய் புண்டரீகனே (96)

848 வெய்ய வாழி சங்கு தண்டு * வில்லும் வாளும் ஏந்து சீர்க்
கைய * செய்ய போதில் மாது * சேரும் மார்ப நாதனே **
ஐயிலாய ஆக்கை நோய் * அறுத்து வந்து நின்னடைந்து *
உய்வதோர் உபாயம் நீ * எனக்கு நல்க வேண்டுமே (97)

849 மறம் துறந்து வஞ்சம் மாற்றி * ஐம்புலன்கள் ஆசையும்
துறந்து * நின் கண் ஆசையே * தொடர்ந்து நின்ற
நாயினேன் **
பிறந்திறந்து பேரிடர்ச் * சுழிக்கணின்று நீங்குமா *
மறந்திடாது மற்றெனக்கு * மாய நல்க வேண்டுமே (98)

850 காட்டி நான் செய் வல்வினை * பயன் தனால் மனம் தனை *
நாட்டி வைத்து நல்ல வல்ல * செய்ய எண்ணினார் என **
கேட்டதன்றி என்னதாவி * பின்னை கேள்வ நின்னொடும் *
பூட்டி வைத்த என்னை * நின்னுள் நீக்கல் பூவை வண்ணனே (99)

851 பிறப்பினோடு பேரிடர்ச் * சுழிக்கண் நின்றும் நீங்கும் அஃது *
இறப்ப வைத்த ஞான நீசரைக் * கரைக்கொடேற்றுமா **
பெறற்கரிய நின்ன பாத * பத்தியான பாசனம் *
பெறற்கரிய மாயனே * எனக்கு நல்க வேண்டுமே (100)

852 * இரந்துரைப்பதுண்டு வாழி * ஏம நீர் நிறத்தமா *
வரம் தரும் திருக்குறிப்பில் * வைத்ததாகில் மன்னு சீர் *
பரந்த சிந்தை ஒன்றி நின்று * நின்ன பாத பங்கயம் *
நிரந்தரம் நினைப்பதாக * நீ நினைக்க வேண்டுமே (101)

853 விள்விலாத காதலால் * விளங்கு பாத போதில் வைத்து *
உள்ளுவேனதூன நோய் * ஒழிக்குமாதெழிக்கு நீர் **
பள்ளி மாய பன்றியாய * வென்றி வீர குன்றினால் *
துள்ளு நீர் வரம்பு செய்த * தோன்றல் ஒன்று சொல்லிடே (102)

854 திருக்கலந்து சேரும் மார்ப * தேவ தேவ தேவனே *
இருக்கலந்த வேத நீதி * ஆகி நின்ற நின்மலா **
கருக்கலந்த காளமேக * மேனியாய நின் பெயர் *
உருக்கலந்து ஒழிவிலாது * உரைக்குமாறு உரை செயே (103)

855 கடுங்கவந்தன் வக்கரன் * கரன் முரன் சிரம்மவை *
இடந்து கூறு செய்த * பல்படைத் தடக்கை மாயனே **
கிடந்திருந்து நின்றியங்கு * போதும் நின்ன பொற்கழல் *
தொடர்ந்து விள்விலாததோர் * தொடர்ச்சி நல்க வேண்டுமே (104)

856 மண்ணையுண்டுமிழ்ந்து பின் * இரந்து கொண்டளந்து மண் *
கண்ணுள் அல்லதில்லை என்று * வென்ற காலமாயினாய் **
பண்ணை வென்ற இன்சொல் மங்கை * கொங்கை தங்கு
பங்கயக்
கண்ண * நின்ன வண்ணம் அல்லதில்லை * எண்ணும் வண்ணமே (105)

857 கறுத்தெதிர்ந்த கால நேமி * காலனோடு கூட * அன்று
அறுத்த ஆழி சங்கு தண்டு * வில்லும் வாளும் ஏந்தினாய் **
தொறுக்கலந்த ஊனமஃது * ஒழிக்க அன்று குன்றம் முன் *

பொறுத்த நின் புகழ்க்கலால் ஓர் * நேசமில்லை நெஞ்சமே (106)

858 காய்சினத்த காசி மன்னன் * வக்கரன் பவுண்டிரன் *
மாசினத்த மாலி மான் * சுமாலிகேசி தேனுகன் **
நாசம் உற்று வீழ * நாள் கவர்ந்த நின் கழற்கலால் *
நேச பாசம் எத்திறத்தும் * வைத்திடேன் எம் ஈசனே (107)

859 கேடில் சீர் வரத்தனாய்க் * கெடும் வரத்து அயன் அரன் *
நாடினோடு நாட்டமாயிரத்தன் * நாடு நண்ணினும் **
வீடதான போகம் எய்தி * வீற்றிருந்த போதிலும் *
கூடும் ஆசை அல்லதொன்று * கொள்வனோ குறிப்பிலே (108)

860 சுருக்குவாரை இன்றியே * சுருங்கினாய் சுருங்கியும் *
பெருக்குவாரை இன்றியே * பெருக்கமெய்து பெற்றியோய் **
செருக்குவார்கள் தீக்குணங்கள் * தீர்த்த தேவ தேவன் என்று *
இருக்குவாய் முனிக் கணங்கள் ஏத்த * யானும் ஏத்தினேன் (109)

861 தூயனாயும் அன்றியும் * சுரும்புலாவு தண்துழாய் *
மாய நின்னை நாயினேன் * வணங்கி வாழ்த்தும் ஈதெலாம் **
நீயும் நின் குறிப்பினில் * பொறுத்து நல்கு வேலை நீர் *
பாயலோடு பத்தர் சித்தம் * மேய வேலை வண்ணனே (110)

862 வைது நின்னை வல்லவா * பழித்தவர்க்கும் மாறில் போர் *
செய்து நின்ன செற்ற தீயில் * வெந்தவர்க்கும் வந்துன்னை **
எய்தலாகும் என்பர் * ஆதலால் எம் மாய நாயினேன் *
செய்த குற்றம் நற்றமாகவே கொள் * ஞால நாதனே (111)

863 வாள்களாகி நாள்கள் செல்ல * நோய்மை குன்றி மூப்பெய்தி *
மாளு நாள் அதாதலால் * வணங்கி வாழ்த்து என் நெஞ்சமே **
ஆளதாகும் நன்மை என்று * நன்குணர்ந்ததன்றியும் *
மீள்விலாத போகம் * நல்க வேண்டும் மால பாதமே (112)

864 சலங்கலந்த செஞ்சடைக் * கறுத்த கண்டன் வெண்தலை *
புலன் கலங்க உண்ட பாதகத்தன் * வன் துயர் கெட **
அலங்கல் மார்வில் வாச நீர் * கொடுத்தவன் அடுத்த சீர் *
நலங்கொள் மாலை நண்ணும் வண்ணம் * எண்ணு வாழி
நெஞ்சமே (113)

865 ஈனமாய எட்டும் நீக்கி * ஏதமின்றி மீது போய் *

வானமாள வல்லையேல் * வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே **
ஞானமாகி ஞாயிறாகி * ஞாலமுற்றும் ஓர் எயிற்று *
ஏனமாய் இடந்த மூர்த்தி * எந்தை பாதம் எண்ணியே (114)

866 * அத்தனாகி அன்னையாகி * ஆளும் எம்பிரானுமாய் *
ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து * நம்மை ஆட்கொள்வான் **
முத்தனார் முகுந்தனார் * புகுந்து நம்முள் மேவினார் *
எத்தினால் இடர்க்கடல் கிடத்தி * ஏழை நெஞ்சமே (115)

867 மாறு செய்த வாளரக்கன் * நாளுலப்ப அன்று இலங்கை *
நீறு செய்து சென்று கொன்று * வென்றி கொண்ட வீரனார் **
வேறு செய்து தம்முள் என்னை * வைத்திடாமையால் * நமன்
கூறு செய்து கொண்டிறந்த * குற்றம் எண்ண வல்லனே (116)

868 அச்சம் நோயொடு அல்லல் பல்பிறப்பு * ஆய மூப்பிவை *
வைத்த சிந்தை வைத்த ஆக்கை * மாற்றி வானில் ஏற்றுவான் **
அச்சுதன் அனந்த கீர்த்தி * ஆதி அந்தம் இல்லவன் *
நச்சு நாகணைக் கிடந்த * நாதன் வேத கீதனே (117)

869 சொல்லினும் தொழிற்கணும் * தொடக்கறாத அன்பினும் *
அல்லும் நன்பகலினோடும் * ஆன மாலை காலையும் **
வல்லி நாண்மலர்க் கிழத்தி * நாத பாத போதினை *
புல்லி உள்ளம் விள்விலாது * பூண்டு மீண்டதில்லையே (118)

870 * பொன்னி சூழ் அரங்க மேய * பூவை வண்ண மாய கேள் *
என்னதாவி என்னும் * வல்வினையின் உட்கொழுந்தெழுந்து **
உன்ன பாதமென்ன நின்ற * ஒண்சுடர்க் கொழுமலர் *
மன்ன வந்து பூண்டு * வாட்டமின்றி எங்கும் நின்றதே (119)

871 * இயக்கறாத பல்பிறப்பில் * என்னை மாற்றி இன்று வந்து *
உயக்கொள் மேக வண்ணன் நண்ணி * என்னிலாய தன்னுளே **
மயக்கினான் தன் மன்னு சோதி * ஆதலால் என்னாவி தான் *
இயக்கெலாம் அறுத்து * அறாத இன்ப வீடு பெற்றதே (120)

**திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்**